## RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF, UTHANGARAI

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சாட்சி திறந்த நீதிமன்றத்தில் இன்று 17.07.2023 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு உரிமையியல் விசாரணை முறைச்சட்ட பிரிவின் கீழ் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case | : | O.S.No. 2/2021 | CNR.No | : | TNKI13-000111-2020 |
| Name | : | வெங்கடேசன் | Father's Name | : | ஜெயராமன் |
| Witness for | : | Plaintiff | Calling | : | PW1 |
| Age | : | 40 | Village | : | கீழ்மத்தூர் |
| Taluk | : | ஊத்தங்கரை | District | : | கிருஷ்ணகிரி |

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் எனக்கு படிக்க தெரியும், 6-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன ஓட்டுனர் உரிமம் எடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு இரண்டு சக்கர வாகனமும் நான்கு சக்கர வாகனமும் ஓட்ட தெரியுமா என்றால் இரண்டு சக்கர வாகனம் மற்றும் டிராக்டர் ஓட்ட தெரியும். என்னிடம் வண்டி உள்ளதா என்றால் எனது அப்பா பெயரில் இரண்டு சக்கர வாகனமும் டிராக்டரும் உள்ளது. இரு சக்கர வாகனத்தின் எண் தெரியுமா என்றால் தெரியும் 5414 ஆகும். டிராக்டர் வண்டியின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. 1 டிராக்டர் தான் உள்ளதா என்றால் இரண்டு டிராக்டர் வண்டிகள் உள்ளது. அதன் பதிவு எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் இருசக்கர வாசனமும் டிராக்டரும் இல்லை என்றும் என் தந்தை பெயரிலும் நான் சொல்வது போல் இரு சக்கர வாகனமும் டிராக்டரும் இ ல்லை என்றும் வழக்கிற்காக அவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2. **வா.சா.ஆ.4** யார் யாருக்கு எழுதிக்கொடுத்தது என்றால் சின்னப்பையன் (எ) குழந்தை (எ) மாக்கன் அவரது மகள் குழந்தை (எ) பெரியதாயிக்கு எழுதிக் கொடுத்தது. **வா.சா.ஆ.4** கிரைய பத்திரமா அல்லது விடுதலை பத்திரமா என்றால் விடுதலை பத்திரம். அதில் என்னென்ன சர்வே எண்கள் சொத்துக்கள் எழுதி கொடுத்தார்கள் என்றால் **சர்வே எண்,125/4 பி, 13/4 1 எ, 13/2 பி, 13/3 சி, 13/4 பி** மற்றும் பல சர்வே எண்கள் இருக்கின்றன அவை எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் **வா.சா.ஆ.4** மகள் குழந்தை (எ) பெரியதாயிக்கு எழுதிக் கொடுத்துள்ளேன் என்று அது

திருவேங்கடம் என்பவருக்கு தான் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலே சொன்ன சங்கதிகள் தவறு என்றால் சரிதான். **வா.சா.ஆ.4** காண்பிக்கப்பட்டு அதில் உள்ள சர்வே எண்கள் 12/4, 12/6, 12/10 ,13/4, 21/3, 124/1, 125/1, 12/1, 12/3, 12/7, 124/2, **மற்றும்** 14/5 ஆகியவை மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். **வா.சா.ஆ.4 ல்** சர்வே எண் 125/4 டி அல்லது 125/4 என்ற சர்வே எண்கள் உள்ளதா என்றால் இல்லை. **வா.சா.ஆ.4** விடுதலை பத்திரம் சர்வே எண்கள் சொத்துக்கள் ஒட்டி அப்போது மண் சாலையும் தற்போது அது தார் சாலையுமாக செல்கிறது என்றால் சரிதான்.

3. நான் பிறப்பதற்கு முன்பு மேற்படி சர்வே எண்கள் சொத்துக்களுக்கு எவ்வாறு எனது தாத்தா திருவேங்கடம் கவுண்டர் சென்று வந்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக சென்று வந்தார் என்றால் சரிதான். எனது தாத்தா திருவேங்கட கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் **2005–ம்** வருடம் இறந்தார். இறப்பதற்கு முன்பு **1961** விடுதலை பத்திரத்தில் உள்ள சொத்துக்களுக்கு எதாவது கிரையம், உயில், ஆவணம் எழுதினாரா என்றால் இல்லை.

4. எனது தாத்தா திருவேங்கடத்திற்கு எத்தனை குழந்தைகள் என்றால் 8 குழந்தைகள். 3 ஆண் பிள்ளைகள் , 5 பெண் பிள்ளைகள் அதில் என் தந்தை முதல் குழந்தை ஆவார். எனது தந்தை உடன் பிறந்தவர்களில் ஒரு மகள் இறந்துவிட்டார், மற்றவர்கள் உயிருடன் தான் இருக்கிறார்கள். எனது தாத்தா உயிருடன் இருக்கும் போது சொத்துக்கள் எதுவும் விற்பனை செய்துள்ளாரா என்றால் நிரைய செய்திருந்தார் அவற்றின் சர்வே எண்கள் மற்றும் விவரங்கள் எனக்கு தெரியாது. எனது தாத்தா தார் ரோடு ஒட்டி உள்ள சொத்துக்களை தான் விற்பனை செய்தார் என்றால் சரிதான். கடைசியாக எனது தாத்தா விற்பனை செய்த சொத்துக்களின் வருடம் மற்றும் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது.

5. **வா.சா.ஆ.3** யார் யாருக்கு எழுதிக்கொடுத்தது என்றால் எனது தந்தை எனக்கு 2016–ம் ஆண்டு எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஆகும். அதில் எத்தனை சொத்துக்கள் கொடுத்தார் என்றால் **சர்வே எண்.13/4 பி 2 ஏக்கர் 93** சென்ட் சொத்தாகும். எனது தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கும் போது மேற்படி சொத்தில் என்ன என்ன இருந்தது என்றால் கிணறு –1, போர் –1, பயிர் கரும்பு, மஞ்சள், வாழை, நெல் மற்றும் மாமரங்கள் அவையுடன் ஆர்சிசி மோல்டிங்க வீடு, அளவு 22 க்கு 29 ஆகும் மற்றும் 16 க்கு 22 அடி சீட் கொண்ட மாட்டு கொட்டகை. எனக்கு கொடுத்த சொத்தில் நான்கு பக்க எல்லைகள் என்னவென்றால் , **வா.சா.ஆ.3** காண்பிக்கப்பட்டு, கமல் நாதன்

நிலத்திற்கு மேற்கு, கோவிந்தன் நிலத்திற்கு கிழக்கு, திருப்பதி நிலத்திற்கு தெற்கு மற்றும் பெருமாள் நிலத்திற்கு வடக்கு இதன் மத்தியில் உள்ளது. தற்போது எனக்கு அப்பா தானம் கொடுத்த சொத்திற்கு தெற்கு புறத்தில் பிரதிவாதிகள் நிலம் உள்ளது என்றால் சரிதான். எனது சொத்திற்கு தெற்கு பக்கத்தில் காளியப்பன் த/பெ. தழுகான் நிலம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி காளியப்பன் நிலத்தின் **சர்வே எண்**.125/4 **இ** என்றால் சரிதான். பிரதிவாதிகளின் சொத்தின் **சர்வே எண்**.125/4 **டி** என்றால் சரிதான். எனது சொத்தின் **சர்வே எண்**.13/4 **பி** சொத்தானது கிழக்கு மேற்காக நீளமாக உள்ளது என்றால் சரிதான். **வா.சா.ஆ.8** ன் படி உள்ளது என்றால் சரிதான். எனது சொத்தின் தெற்கு பக்கத்தில் மேற் சொன்ன சர்வே எண்கள் போக சர்வே எண் 21 மற்றும் 10 உள்ளது என்றால் சரிதான்.

6. மேற்படி சொத்துக்களுடன் என் தாத்தா விற்பனை செய்த **சர்வே எண்**.12 **மற்றும் 124** சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. எனது சொத்தின் எல்லை முடியும் வரை மேற்சொன்ன பிரதிவாதிகள் காளியப்பன் சொத்துக்கள் தவிர்த்து வேறு சொத்துக்கள் ஒட்டி உள்ளதா என்றால் உள்ளது, குழந்தையம்மாள் நிலம் உள்ளது. சாட்டி தற்போது குழந்தையம்மாள் நிலம் வடக்கு பக்கம் உள்ளதாக சொல்கிறார். தெற்கு பக்கம் வேறு நிலங்கள் இல்லையா என்றால் இல்லை. பிரதிவாதிகளின் நிலம் தெற்கு பக்கத்தில் கிழ மேலாக எத்தனை மீட்டர் நீளம் உள்ளது என்றால் **வா.சா.ஆ.8** காண்பிக்கப்பட்டு, சுமார் 40 அடி இருக்கும்.

7. **வா.சா.ஆ.7** ல் உள்ள ஜெயராமன் யார் என்றால் என் தந்தை ஆவார். வா.சா.ஆ.7 எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் எப்எம்பி, வரைபடம் பெருவதற்காக மனு தாக்கல் செய்ததன் பேரில் அனுப்பப்பட்டிருந்தது, எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழி பிரச்சனைக்காக தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா ஜெயராமன் பேரில் **சர்வே எண்**.13/4, 125/4 சொத்துக்கள் ஒட்டி எதேனும் சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. **வா.சா.ஆ.7** ல் சொல்லியுள்ள சர்வே எண்கள் குறித்து அ பதிவேடு, அடங்கல், சிட்டா, எப்.எம்.பி, எஸ்.எல்.ஆர். வழங்கப்பட்டதா என்றால் எம்.எம். பி மட்டும் தான் உள்ளது என்று வழங்கப்பட்டது. அவை **வா.சா.ஆ.8 மற்றும் 9** என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8, மற்றும் வா.சா.ஆ.9 ஆகியவை எனது தந்தை கடந்த **01.08.2022** ம் தேதி வாங்கியதை தான் எனது தரப்பில் ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தை வாங்கியதால் தான் எனக்கு விவரம் தெரியவில்லை என்றால் **01.08.2022 ம்**

தேதி வாங்கிய பிறகு தான் பாதை செல்லும் விவரம் தெரிய வந்தது. வா.சா.ஆ.7, **வா.சா.ஆ.8**, மற்றும் **வா.சா.ஆ.9** எந்த ஆவணத்தில் நான் சொல்லும் பாதை செல்லும் விவரம் தெரிய வந்தது என்றால் **வா.சா.ஆ.9** ஆவணத்தை கடந்த **01.08.2022** தேதி பார்த்த பிறகு தான் தெரிய வந்தது. நான் எத்தனை சர்வே எண்கள் குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒரே சர்வே எண் குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த சர்வே எண் **125/4டி** ஆகும். **வா.சா.ஆ.9** ல் **சர்வே எண் 125/4** எத்தனை உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்கள் **125/4 ல் 4எ முதல் 4இ** வரை 5 உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை.

9. வா.சா.ஆ.9 ஆவணத்தில் எனது தந்தையே சில குறிப்புகளை எழுதியுள்ளார் என்றால் சரியல்ல. **வா.சா.ஆ.9** ல் வழிப்பாதைக்ககாக எந்த உட்பிரிவும் இல்லை என்றும் **வா.சா.ஆ.9** வழக்கிற்காக எனது தந்தையால் தயரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. **வா.சா.ஆ.9** ல் வழிக்காக தனியாக உட்பிரிவு காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை, நீள அகலம் போட்டுள்ளது. **வா.சா.ஆ. 7 முதல் வா.சா.ஆ. 9** வரையளான ஆவணங்கள் குறித்து எனக்கு தெரியாது என்றும் எனது தந்தையை விசாரித்தால் தான் தெரியும் என்றால் சரிதான்.

10. **வா.சா.ஆ. 9** அமைப்பிற்கும் எனது வழக்குரை வரைபடமும் முரன்பட்டுள்ளது என்றால் சரியல்ல, ஒற்றுமையாக தான் உள்ளது. எனது வழக்குரை மாதிரி வரைபடத்தில் ABCD என்று குறிப்பிட்டுள்ள பாதை தெற்கிழிருந்து வடக்கு நோக்கி சென்று மீண்டும் வடகிழக்கு நோக்கி சென்று மீண்டும் வடக்கு நோக்கி சென்று மீண்டும் வடமேற்கு நோக்கி செல்கிறது என்றால் சரிதான். **வா.சா.ஆ.9** ல் பாதை தெற்கிழிருந்து வடக்கு நோக்கி சென்று மீண்டும் வடகிழக்காக வளைந்து மீண்டும் கிழக்கு நோக்கி செல்கிறது என்றால் சரிதான். பிரதிவாதிகள் நிலத்தில் எனது நிலத்தை ஒட்டி கிணறு உள்ளது என்றால் சரிதான். அது சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது என்றால் சரிதான். அந்த கிணறு சுமார் 40 அடிகள் தள்ளி உள்ளது.

11. நீதிமன்ற ஆணையர் பார்வையிடும் போது நான் நிலத்தின் இருந்தேனா என்றால் இருந்தேன். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையை நான் படித்தேனா என்றால் இல்லை. அதன் விவரங்கள் எனக்கு எனது வழக்கறிஞர் படித்து சொன்னாரா என்றால் சொன்னார். அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் எனது நிலத்தின் அருகில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். (நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீதிமன்ற ஆவணம்

**நீ.ம.சா.ஆ.1** னாக குறியீடு செய்யப்படுகிறது.) (நீதிமன்ற ஆணையர் புகைபடம் நீதிமன்ற ஆவணம் **நீ.ம.சா.ஆ.2** எண்ணிக்கை 26 ஆக குறியீடு செய்யப்படுகிறது). நீதிமன்ற ஆணையர் வீடியோ எடுத்தாரா என்றால் எடுத்தார். அது குறுந்தகடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். (அது நீதிமன்ற ஆவணம் **நீ.ம.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது). நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் புகைப்படங்களுக்கு ஆட்சேபணை தெரிவித்தேன என்றால் இல்லை. 1ம் புகைப்படத்தில் உள்ள தார் சாலை தெற்கில் இருந்து வடக்கு நோக்கி செல்லும் தார் சாலை என்றால் சரிதான். 6 வது புகைப்படத்தில் உள்ள வண்டி வைக்கோல்போர் மற்றும் கற்கல் எங்குள்ளது என்றால் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லும் நிலத்தில் உள்ளது. அது எப்போது போடப்பட்டது என்றால் வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு வழியில் செல்லவிடாமல் தடுக்க போடப்பட்டது. அதை தவிர வேறு தகராறு நடந்ததா என்றால் மண்ணை வாரி இறைத்தார்கள்.

12. நுரம்பு மண் திட்டிற்கும், வைக்கோல் போர் இருக்கும் நிலத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 அடி இருக்கும். மண் வாரி போட்டதகா சொல்லும் நிலையில் எந்த இடத்தில் அவ்வாறு போடப்பட்டது என்றால் ஏபி என்று வழக்குரை மாதிரி வரைடபடத்தில் காட்டப்பட்டிருக்கும் இடத்தில் இருந்து சுமார் 200 அடி துளைவில் இருக்கும். மண் வைக்கோல் போர் மற்றும் கற்கல் ஆகியவற்றை வழியில் போட்டதாக சொல்லும் நிலையில் எனது வழக்குரை மாதிரி வரைபடத்தில் அவற்றை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மண்ணை வாரி போட்டார்கள் என்று சொல்லும் நிலையில் எந்த தேதியில் அவ்வாறு செய்தார்கள் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 2020- ம் ஆண்டு. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மாதிரி வரைபடத்தில் நீள அகல விவரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

13. பிரதிவாதிகள் எந்த ஒரு வைக்கோல் போர், கற்கள் மற்றும் மண் ஆகியவற்றின் வழியை மறிப்பதற்காக போடவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. **நீ.ம.சா.ஆ.2** 26 புகைப்படங்கள் காட்டப்பட்டு, எந்த புகைப்படத்தில் எனது நிலமும் பிரதிவாதிகள் நிலமும் ஒட்டி உள்ளது காட்டப்பட்டுள்ளது என்றால் எந்த புகைப்படத்திலும் இல்லை. நீதிமன்ற ஆணையர் வருவதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு மஞ்சள் செடிகளை ஒட்டி வழி ஏற்படுத்தப்பட்டது என்றால் அது சென்று வந்து கொண்டிருந்த வழிதான புற்செடிகள் சுமார் 1-2 அடி உயரம் வழந்திருந்தது அதை சுமார் 4-5 நாட்களுக்கு முன்பு அகற்றினேன். பாம்பு

போன்றவை வருவதால் அகற்றினேன். மஞ்சள் செடியை ஒட்டி இருக்கும் பாதை எனது நிலமான சர்வே **எண்.13/4பில்** உள்ளது என்றால் சரிதான். **நி.ம.சா.ஆ.2 ( 17)** மற்றும் **21ம்** புகைப்படங்களில் உள்ள வீடு என்னுடையது என்றால் சரிதான். புகைப்படம் 22 மற்றும் 26 ல் உள்ள வழியானது வழக்கு 2ம் அயட்டம் சொத்தில் உள்ள எனது வீட்டில் இருந்து கிழக்கு நோக்கி செல்லும் வழி என்றால் சரிதான். அது சுமார் 8 அடி அகலம் உள்ளது. அதில் டிராக்டர் செல்லும் என்றால் சரிதான். அதில் எவ்வளவு நீளம் உள்ளது என்றால் சுமார் 150 அடி இருக்கும். அது கிழக்கு பக்கம் உள்ள சின்னராஜ் நிலம் வரை செல்கிறது என்றால் இல்லை. எனது நிலத்து வரப்பு வரை செல்கிறது என்றால் இல்லை. அதில் நான் டிராக்டர் ஓட்டி செல்கிறேனா என்றால் இல்லை. எனது நிலத்திற்கு கிழக்கு சின்னராஜ் நிலமும் அதற்கு கிழக்கு மண் சாலை உள்ளது என்றால் சரிதான். எனது நிலத்தின் வரப்பில் இருந்து மண் சாலை எவ்வளவு தெலைவில் உள்ளது என்றால் சுமார் 350 அடி தொலைவில் உள்ளது. சின்னராஜ் நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

சாட்சியின் வாக்குமூலம் என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு, சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியென ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

G AMAR ANAND
DISTRICT MUNSIF, UTHANGARAI
Digitally signed by G AMAR ANAND
Location: KRISHNAGIRI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஊத்தங்கரை.